# News Release

# உங்களுக்காகச் சிறப்பாகச் சேவையளிக்கத் தீயணைப்பு நிலையம் 7-1 மேம்படுத்தப்படுகிறது

*2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடையும்*

**வாகன், ஒன்ராறியோ (ஜூலை 8, 2025)** – வாகன் நகரம் தனது குடியிருப்பாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் உறுதியாக உள்ளது. அதில் எங்கள் தீயணைப்பு நிலையங்கள் நவீனமயமாக இருக்கவும், அவசரகாலப் பதிலளிப்பவர்கள் உடனடியாக நடவடிக்கையில் இறங்கத் தயாராக இருக்கவும் செய்வதை உறுதி செய்வதும் அடங்கும்.

இன்று, வாகன் நகரமும் வாகன் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையும் (VFRS) இணைந்து, 835 கிளார்க் அவென்யூவில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையம் 7-1ஐ மேம்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கான தொடக்க விழாவை அதிகாரப்பூர்வமாக நடத்தியது. இந்த விழாவில் வாகன் நகர மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சில் உறுப்பினர்கள், VFRS தலைவர் ஆண்ட்ரூ ஸ்வானிடாஜ்ஸ் ஆகியோருடன் பிக்கரிங்—ப்ரூக்லின் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜுவானிட்டா நாதன், ஒன்ராறியோ உள்கட்டமைப்பு அமைச்சகத்திற்கான பாராளுமன்ற உதவியாளர் அமர்ஜோத் சந்து, தோர்ன்ஹில் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லாரா ஸ்மித் மற்றும் பிற மதிப்பிற்குரிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

1985-இல் முதலில் கட்டப்பட்ட இந்த நிலையம், தற்போது அதனை நவீனமயமாக்கவும், செயல்திறனை மேம்படுத்தவும், நிலைத்தன்மை இலக்குகளை ஆதரிக்கவும், முழுமையான புதுப்பிப்பு தேவை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

தீயணைப்பு நிலையம் 7-1ஐ புதுப்பிப்பதற்கான மொத்த செலவு 9 மில்லியன் டாலர்கள் ஆகும். இதில் $7.9 மில்லியனை வாகன் நகரம் வழங்குகிறது; கனடா அரசிடம் இருந்து $880,000 மற்றும் ஒன்ராறியோ அரசிடம் இருந்து $220,000 நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டுள்ள மேம்பாடுகள் மூலம் மின் நுகர்வு, இயற்கை எரிவாயு பயன்பாடு மற்றும் நீர் பயன்பாடு குறைக்கப்படும், அதேசமயம் நிலையத்தின்

செயல்திறன் அதிகரித்து அதன் ஆயுளும் நீடிக்கச் செய்யப்படும். இந்தத் திட்டம், கார்பன் வெளியீட்டை குறைக்கும் வாகன் நகரத்தின் உறுதிப்பாட்டையும், தோர்ன்ஹில் பகுதிக்கான நம்பகமான மற்றும் தரமிக்க அவசரசேவை கட்டமைப்பை உறுதி செய்யும் முயற்சியையும் பிரதிபலிக்கிறது.

மேம்படுத்தப்படும் தீயணைப்பு நிலையம் 7-1, தன்னுடைய சுற்றுப்புற சமூகத்தில் உள்ள அவசரசேவைக் கட்டமைப்பை தொடர்ந்து ஆதரிக்கப் போகிறது. அதில் அருகிலிருக்கும் தீயணைப்பு நிலையமான 7-8க்கு ஆதரவு வழங்குவதும் அடங்கும். இந்த மேம்பாட்டுப் பணிகள் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட உள்ளன. வாகனின் வளர்ந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதை உறுதி செய்யும் அதே நேரத்தில், உள்ளூர் மற்றும் நகர அளவிலான பதிலளிப்பு நேரங்களை மேம்படுத்தவும் உதவும்.

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்:
vaughan.ca/**Fire-Station-7-1**.

**மேற்கோள்கள்**

“கனடாவின் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றின் மேயராக, நாங்கள் வளர்ச்சியைச் சரியாக நிர்வகித்து, அனைவரும் செழிப்புடன் வாழக்கூடிய ஒரு பாதுகாப்பான நகரத்தை உருவாக்க தேவையான அனைத்தையும் செய்து வருகிறோம். இதில், இப்போதும் எதிர்காலத்திலும் குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் வகையில், அவசரகாலச் சேவைக் கட்டிடங்களைப் புதுப்பிப்பதும் அடங்கும். தீயணைப்பு நிலையம் 7-1 இன் முழுமையான புதுப்பிப்புகள், கட்டிடத்தின் தரநிலைகளை மேம்படுத்தவும், அவசரசேவைகளுக்கான செயல்திறனை அதிகரிக்கவும், சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் உதவும். இந்த முக்கியமான திட்டத்திற்கு ஆரம்பக் கட்டுமான பணிகளைத் தொடங்கிய வாகன் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையினருக்கும், தீயணைப்பு தலைவர் ஆண்ட்ரூ ஸ்வானிடாஜ்ஸிற்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். மேலும், வாகன் நகரத்திலும், எங்கள் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நலனிலும் தொடர்ந்து முதலீடு செய்யும் கூட்டரசு மற்றும் மாகாண அரசுகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

“கனடா அரசாங்கம், கனடியர்களுக்கான முக்கியமான கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு வலிமையான நாடாகக் கனடாவை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. இன்று வாகனில் மேற்கொள்ளப்படும் இந்த மாதிரியான முதலீடுகள், சமூகத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்தும் முக்கியமான சேவைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், அந்த உறுதிப்பாட்டைக் காட்டுகின்றன.”

- ஜுவானிட்டா நாதன், பிக்கரிங்—ப்ரூக்லின் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்

“வாகன் நகரத்தின் தீயணைப்பு நிலைய மேம்பாட்டுப் பணிகளுக்கு எங்கள் அரசு ஆதரவளிக்கும் வாய்ப்பைப் பெறுவதில் பெருமைகொள்கிறது. இந்த மேம்பாடுகள் செலவினங்களைக் குறைக்கவும், கார்பன் உமிழ்வை குறைக்கவும், உள்ளூர் தீயணைப்பு வீரர்களுக்குத் தேவையான அவசரசேவைக் கட்டமைப்பை உருவாக்கவும் உதவும். இந்தத் திட்டம், ஒன்ராறியோ மாநிலத்தின் வரலாற்றில் மிகப்பெரிய மூலதனத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். அதன் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் $200 பில்லியனுக்கு மேல் முதலீடு செய்து, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து வசதிகள், மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் பிற முக்கியக் கட்டமைப்புகளைக் கட்டவும் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை நமது சமூகங்களை வலுப்படுத்தவும், பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும் உதவும்.”

- கிங்கா சுர்மா, உள்கட்டமைப்பு அமைச்சர், ஒன்ராறியோ

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை, நகரத்தில் வாழும், வேலைசெய்யும் மற்றும் சுற்றிபார்க்க வரும் அனைவருக்கும் விரைவான அவசர சேவைகள், தீயணைப்புப் பாதுகாப்பு, தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு கல்வி ஆகியவற்றை வழங்க முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- வாகன் நகரத்தின் தீயணைப்பு நிலையம் 7-1ஐ மேம்படுத்தும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன, மேலும் அவை 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தீயணைப்பு நிலையம் 7-1ஐ புதுப்பிப்பதற்கான மொத்த செலவு 9 மில்லியன் டாலர்கள் ஆகும். இதில் $7.9 மில்லியனை வாகன் நகரம் வழங்குகிறது; கனடா அரசிடம் இருந்து $880,000 மற்றும் ஒன்ராறியோ அரசிடம் இருந்து $220,000 நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் தீயணைப்பு நிலையம் 7-1 வலைப்பக்கம்

# News Release

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca